திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. ஒவ்வொரு பாடத்திற்கும், 100 மதிப் பெண்கள் என்று வைத்திருக்கிறபோது, குறிப்பாக வரலாற்றுக்கும், புவியியலுக்கும் ஏன் 50, 50 மார்க்குகள் வைக்க வேண்டும். வரலாறும், புவியியலும் ஒரு நாட்டிற்கு முக்கியமான பாடங்களாக இருக்கிற காரணத்தால், வருங்காலத்திலாவது அதைத் தனித் தனியாகப் பிரித்து, ஒவ்வொன்றிற்கும் 100, 100 மதிப்பெண்கள் வைத்து , அந்தப் பாடங்களை விரிவாக நடத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுதே அவைகள் விரிவாகத்தான் நடந்துக் கொண்டிருக்கின்றன. தனித்தனியாகத்தான் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். 1949—50-க்கு முன்னாலே அவைகள் தனித் தனியாக இல்லை. அப்போது சோஷியல் ஸ்டடீஸ் என்ற வரலாற்றையும் கலந்து ஒரே பாடமாக நடத்திக் கொண்டிருந்தார்கள். இப்போது அதற்குப் பிறகு தனித் தனியாகத்தான் நடத்தி கொண்டிருக்கிறார்கள். தனித் தனியாகப் பார்க்கும்போது, ஒவ்வொரு பாடமும் முக்கியமாகத்தான் தோன்றும். எல்லாவற்றையும் வைத்துப் பார்க்கிறபோது, இது மிகவும் முக்கியம். அதற்குப் பிறகு, இன்னொன்று என்று வரிசைப்படுத்தி, அந்த அடிப்படையில் பார்க்கிறபோது, வரலாற்றுக்கும், புவியியலுக்கும் 50, 50 மார்க்குகள் என்று வைத்து நடத்துவது இப்போது இருக்கக்கூடிய சூழ்நிலையில் நல்லது என்று கருதித்தான் இந்த முடிவு எடுக்கப்பட்டு, அது நடைபெற்றுக்கொண்டு வருகிறது. அதிலே மாற்றம் தேவையில்லை என்றுதான் கல்வித் துறையும் கருதுகிறது.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

க. பரமத்தி உயர்நிலைப் பள்ளி.

*வினா எண் 955—திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்டவினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் வட்டம், க. பரமத்தி உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளி ஆக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) தற்போது இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பரமத்தியிலிருக்கும் பிள்ளைகள் மேல்நிலைப் பள்ளிக்குப் போகவேண்டுமானால் அங்கேயிருந்து கரூர் வரவேண்டும் அல்லது சின்னதாராபுரம் செல்ல வேண்டும். இரண்டுமே 20 மைல் தொலைவில் இருப்பதால், பரமத்தி உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றுவதற்கு அரசு இனிமேலாவது முயற்சி எடுக்குமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே எனக்கு வந்திருக்கிற விவரப்படி, அங்கே இடவசதி இல்லை என்றும், மக்களின் பங்குத் தொகையான 25,000 ரூபாயை பொதுமக்கள் கொடுக்க முன்வரவில்லை என்றும், அங்கேயிருக்கும் பிள்ளைகள் கரூர் மற்றும் சின்னதாராபுரம் சென்று மேல்நிலைப் பள்ளிகளில் சேருவதற்கு வழி இருப்பதாலும், இந்த ஆண்டு அந்தப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக ஆக்குவதற்கான வழி முறைகள் காணப்படவில்லை என்றும் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இதற்குக் காரணங்களைத் தெரிந்துகொண்டு, அதற்கு மாற்று வழிமுறைகள் காணவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னபடி சின்னதாராபுரம், கரூர் போன்ற ஊர்களுக்குச் செல்ல வேண்டுமானால் 20 மைல் செல்ல வேண்டும். அமைச்சர் அவர்கள் சொல்லியது போன்று 25,000 ரூபாயைக் கொடுக்க அந்த மக்கள் தயாராக இருக்கிறார்கள். அதற்கான ஏற்பாடுகளைச் செய்யத் தயாராகவும் இருக்கிறோம். அப்படி அந்தப் பணத்தைக் கட்டி விட்டால், விரைவில் அந்தப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்ற அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, மேல்நிலைப் பள்ளியை ஆரம்பிப்பதற்குப் பரிசீலனை செய்வதற்காகத்தான் அவைகள் எல்லாம் தேவை. முதலில் இவைகளை முடித்து விட்டு. பிறகு மேற்கொண்டு பரிசீலிக்கலாம்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு தமிழகத்தில் புதியதாக மேல்நிலைப் பள்ளிகள் துவங்கும் உத்தேசம் அரசுக்கு இருக்கிறதா? ஆம் என்றால் எத்தனை பள்ளிகள் துவங்க இருக்கின்றன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, இப்போதுள்ள உத்தேசப்படி அப்படி எதையும் ஏற்படுத்துவதாக இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 956 முதல் 960 வரை மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்பெறுகின்றன.

குச்சிவள்ளிக் கிழங்கு மாவிலிருந்து சாராவி தயாரிக்கும் திட்டம்.

*வினா எண். 961.—டாக்டர் கே. பி. இராமலிங்கம் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) குச்சிவள்ளிக் கிழங்கு மாவிலிருந்து எதில் ஆல்கஹால் (Ethyl Alcohol) தயாரிக்கும் தொழிற்சாலை ஆரம்பிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

(ஆ) மத்திய அரசு அதற்கு அனுமதி அளித்து விட்டதா ?

(இ) ஆம் எனில், அந்தத் தொழிற்சாலை இராசிபுரத்தில் ஆரம்பிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) இல்லை.

(ஆ) and (இ) கேள்விக்கு இடம் இல்லை.

இந்தியா மீட்டர்ஸ் நிறுவனம்.

*வினா எண். 962.—திரு. ஜே. சி. டி. பிரபாகரன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்தியா மீட்டர்ஸ் நிறுவனம் தற்போது யார் பொறுப்பில் இயங்கி வருகிறது ?

(ஆ) அரசு இந்த நிறுவனத்தை ஏற்று நடத்த உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) பாரத் ஹெவி எலக்ட்ரிகல்ஸ் நிறுவனத்தின் நிர்வாகப் பொறுப்பில் இயங்கி வருகிறது.

(ஆ) உத்தேசம் ஏதும் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS